மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 96 | 03.07.2023 (திங்கட்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்க[illegible] ரூ.30.00



# நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்ப தயாராகும்

பக்கம் 4

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு!

## விடுதலை புலிகளின் தலைவரின் மரணம், மரபணு பரிசோதனை யாழில் மைத்திரி

### வெளியிட்ட முக்கிய தகவல்!



பக்கம் 4

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம், மரபணு பரிசோதனை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் இறுதி யுத்த காலத்தின் சில வாரம் பதில் பாதுகாப்பு அமைச்சராக

## இறுதிப்போரின் உண்மைகளை வெளிக்கொண்டுவர

### சர்வதேச விசாரணை அவசியம் - கஜேந்திரன் எம்.பி



பக்கம் 4

இறுதிப் போரில் நடைபெற்ற சரியான விடயங்கள் வெளிக்கொண்டுவர வேண்டுமாக இருந்தால் முழுமையான ஒரு சர்வதேச விசாரணை நடைபெற வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றையதினம்(02.07.2023) தையிட்டி போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தபோது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

## கூட்டாட்சிக் கொள்கையின் பிரகாரம் நீண்டகால அரசியல் தீர்வு வேண்டும் :

### இந்தியாவிடம் பிரித்தானிய தமிழர் பேரவை கோரிக்கை

உள்ளூராட்சி பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடைக்கால ஆணையம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று பிரித்தானியா தமிழர் பேரவை இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதோடு, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்படும் கூட்டாட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு நீண்ட கால அரசியல் தீர்வு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள்

பக்கம் 4

## தமிழர் விவகாரத்தில் இந்தியா செயற்படவேண்டிய விதம் குறித்து

### கடிதம் அனுப்பவுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி!!



பக்கம் 4

# இனப்படுகொலையால் லட்சக்கணக்காக உயிர்களை இழந்தது தமிழினம் மட்டுமே.!

வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான சுதந்திரம் பறிக்கப்பட்ட 1948, பெப்ரவரி 04ஆம் திகதி தொடக்கம் 2009, மே.18, வரை லட்சக்கணக்கான இனப்படுகொலையை சந்தித்த ஒரே இனம் என்றால் அது தமிழினம் மட்டுமே. ஈழவிடுதலைப் போராட்டத்தால் மூன்று இன மக்களும் (தமிழர், சிங்களவர், இஷ்லாமியர்) படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது உண்மை. ஆனால் லட்சக்கணக்கில் உயிரழந்தவர்கள் தமிழர்கள் தான்.

இரண்டாவது நிலையில் ஆயிரக்கணக்கில் உயிரழந்தவர்கள் சிங்கள மக்கள் தான், மூன்றாம் நிலையில் நூற்றுக்கணக்கில் உயிர் இழந்தது முஸ்லிம் மக்கள்தான் இதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

தந்தை செல்வா தொடங்கிய அகிம்சை வழியிலான விடுதலைப்பயணம் 1949 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 ஆம் ஆண்டுவரை நடைபெற்றபோது நூற்றுக்கணக்கில் தமிழர்கள் கொலைசெய்யப்பட்டனர்.

தமிழ்பேசும் மக்களாக தமிழர்களும், முஸ்லிம்களும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியால் மேற்கொண்ட சத்தியாக்கிரகப்போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம், கறுப்புக் கொடிப் போராட்டம், பேரணிகள், மகாநாடுகள், தமிழ்தபால் போராட்டம், ஸ்ரீ எதிர்ப்பு போராட்டம், வீதிமறிப்பு போராட்டம், கடையடைப்பு போராட்டம் என பல விதமான போராட்டங்களில் எல்லாம் தமிழ் தலைவர்களுடன் தமிழ் மக்களுடன், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முஸ்லிம் பொதுமக்கள் ஆண்கள் பெண்கள் எல்லோரும் ஒன்றாக கலந்துகொண்ட வரலாறுகளை மறுக்கமுடியாது.

## அகிம்சை போராட்டம் ஆயதப் போராட்டமாக ஆரம்பித்த வேளை



அதன்பின்னர் 1976, மே.14,ல் வட்டுக்கோட்டை தீர்மானம் சுதந்திர தமிழீழம் அமைக்கும் பிரேரணை தமிழர் விடுதலை கூட்டணியால் தந்தை செல்வா தலைமையில் நிறைவேற்றிய பின்னர் அகிம்சை போராட்டம் ஆயுதப்போராட்டமாக ஆரம்பித்த வேளையில் இளைஞர்கள் 36, விடுதலை இயக்கங்களை ஆரம்பித்தனர்.

இந்தக் காலத்திலும் தமிழ் இளைஞர்களுடன் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து ஈழ விடுதலைப்போராட்டத்தில் இணைந்து உயிர் நீத்த வரலாறுகளையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

தமிழ் தேசிய அரசியலுடன் பின்னிப்பிணைந்து பயணித்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமிழ் தேசிய அரசியலில் இருந்து விலகி 1981 செப்டம்பர் 21ஆம் திகதி முதன் முதலாக காத்தான்குடியில் அஷ்ரப் அவர்கள் முஸ்லிம்களுக்கு தனியான அரசியல் கட்சி தேவை என உணர்ந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஷ் கட்சியை உருவாக்கினார்.

பின்னர் அந்தக் கட்சியை உத்தியோகபூர்வமாக 4 வருடங்களின் பின்னர் 1986 நவம்பர் 29 இல் அரசியல் கட்சியாக அறிவித்து அங்குராப்பணக் கூட்டம் இடம்பெற்றது.

1988 பெப்ரவரி 11இல் தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஷ் தேர்தல் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

1987 செப்டம்பர் 29 இல் சிறிலங்கா - இந்திய ஒப்பத்தம் செய்யும் காலம் வரை பெயரளவிலும், சில கரந்தடி தாக்குதல்களுடனும் செயல்பட்ட 35 விடுதலை இயக்கங்களில் ஓரிரு இயக்கம் அரசியல் நீரோட்டத்தில் அரசியல் கட்சிகளாக செயற்பட்டன.

ஏனைய பல இயக்கங்கள் தொடர்ந்து செயற்படாமல் தமது இயக்கங்களை கலைத்துவிட்டு ஒதுங்கிவிட்டன.

அந்தக் காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ரெலோ, புளட், ஈபி ஆர் எல் எவ் இயக்கங்களை தடைசெய்து அவர்களுக்கு எதிராக மோதல்களை மேற்கொண்டதையும் காணலாம்.

## விடுதலைக்காக போராட்டம்

இருந்த போதும் சிறிலங்கா - இந்திய ஒப்பந்தம் 1987 இல் செய்யப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு எந்த இயக்கமும் விடுதலைக்காக போராடவில்லை.

அதேபோல், 1987 செப்டம்பர் 29 சிறிலங்கா இந்திய - ஒப்பந்தம் வரை கரந்தடி தாக்குதல் மட்டும் நடத்திய விடுதலைப்புலிகள் இயக்கம் அதன் பின்னர் மரபுப்படையணியாக மாறியது. மரபுப்படையணியாக வேறு எந்த தமிழ் ஆயுத இயக்கங்களும் செயல்படவில்லை.

இந்திய அமைதி காக்கும் படையினருடன் தான் முதலாம் கட்ட ஈழப்போரை 1987 அக்டோபர் 10 ஆம் திகதி தொடக்கம் 1990 மார்ச் 24 வரை மேற்கொண்டனர். இந்தியப்படை அன்றைய தினம் சிறிலங்காவை விட்டு வெளியேறியது.

1990 யூன் 10 தொடக்கம் 1994 டிசம்பர் 19 வரையும் விடுதலைப்புலிகள் இரண்டாம் கட்ட ஈழப்போரை சிறிலங்கா படையுடன் முன்னெடுத்தனர்.

1995 ஏப்ரல் 19 தொடக்கம் 1992 பெப்ரவரி 22 ஆம் திகதி வரை மூன்றாம் கட்ட ஈழப்போரை சிறிலங்கா படையினருடன் மேற்கொண்டனர். 2006 மே மாதம் தொடக்கம் 2009 மே 18 முள்ளிவாய்க்கால் மௌனம் வரை நாலாம் கட்ட ஈழப்போர் விடுதலைப்புலிகளால் மேற்கொண்டாலும் சிறிலங்கா இராணுவத்துக்கு துணையாக பல சர்வதேச நாடுகள் செயல்பட்டன என்பது உண்மை.

சிறிலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலையால் லட்சக்கணக்கான தமிழர்கள் பலியானார்கள். அதில் ஏறக்குறைய ஐம்பதாயிரம் மாவீரர்களும், ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளும் உயிர் நீத்தனர் என்பது உண்மை.

சிங்கள மக்களும் சிங்கள படையினரும் அடங்கலாக ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டுள்ளனர். முஸ்லிம் மக்களை பொறுத்தவரை 46 மாவீரர்கள் அடங்கலாக நூற்றுகணக்கானவர்கள் இறந்துள்ளனர் என்பதற்கும் மாற்றுக்கருத்துகள் இல்லை.

சிறிலங்காவில் 1915 இல் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களும் இடையில் முதன் முதலாக ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது தென்பகுதியில் 4075 முஸ்லிம் கடைகள் எரிக்கப்பட்டும் 85 பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டும் 136 முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும் சிங்களவார்களால் நடந்த மோதலாகும்.

அதன்பின்னர் 1976 ஜனவரியில் புத்தளத்தில் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் இனக்கலவரத்தால் 18 முஸ்லிம்கள் காவல்துறையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர், இதன் எதிரொலியாக பொத்துவில் ஒரு பள்ளிவாசல் சிங்களவரால் சேதமாக்கப்பட்டது.

1982, யூலை மாதம் காலியில் ஏற்பட்ட முஸ்லிம் சிங்களவர் மோதலால் கண்டி, மாவனல்ல, கொழும்பு வரை முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். 2002 நவம்பரில் சிலாபம், புத்தளம், காலி வரை சிங்கள முஸ்லிம் இனமோதல் இடம்பெற்றது. இதனால் காலியில் ஒரு முஸ்லிம் இளைஞர் படுகொலை செய்யப்பட்டார்.

1983 ம் ஆண்டு காலப்பகுதியில் தான் தமிழ் முஸ்லிம் மக்களை பிரித்தாளும் தந்திரம் சிங்கள அரசியல் தலைவர்களால் திட்டமிடப்பட்டு விசமத்தனமான பிரசாரங்களை முஸ்லிம் மக்கள் மத்தியில் பரப்பபட்டது.

இதன் வெற்றி 1988 டிசம்பர் 18 இல் அதிபராக தெரிவான ஆர்.பிரமதாசாவின் நிறைவேற்று அதிகாரம் 1990 களில் முஸ்லிம் ஊர்காவல் படையை இனரீதியாக கிழக்கில் ஆரம்பித்தார். பிட்டும் தேங்காய் பூவும் என ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் முஸ்லிம் மக்களை முட்டி மோதும் சமூகமாக மாற்றினார்.

## தமிழ் - முஸ்லிம் முரண்பாடு

இதன் விளைவு தமிழ் முஸ்லிம் மக்களிடையே குரோத மனப்பாங்கு இன்றுவரை தொடர்



கிறது. 1985 இற்கு பின்னர் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் முரண்பாடு மோதல்களால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களின் விபரம்,

1. 1985 ஏப்ரல் 07 இல்
   மன்னார் பள்ளிவாசலில் 06 பேர்
2. 1990 யூலை 12 இல்
   குருக்கள்மடம் கிரான்குளம் 19 பேர்.
3. 1990 ஒகஷ்ட் 03 இல்
   காத்தான்குடி பள்ளிவாசல் 103 பேர்
4. 1990 ஒகஷ்ட் 05 இல்
   முள்ளியவ்காடு 17 பேர்
5. 1990 ஒகஷ்ட் 06 இல்
   அம்பாறை 33 பேர்.
6. 1990 ஒகஷ்ட் 11 இல்
   ஏறாவூர் 121 பேர்
7. 1990 ஒகஷ்ட்11 இல்
   அறுகம்பை 09 பேர்
8. 1990 ஆகஷ்ட் 20 இல்
   வாகனேரி 17 பேர்
9. 1990 ஒக்டோபர் 13 இல்
   அரந்தலாவ 09 பேர்
10. 1991 மார்ச் 24 இல்
    அக்கரைப்பற்று 09,பேர்
11. 1991 மே 20 இல்
    சம்மாந்துறை 09 பேர்
12. 1991 செப்டம்பர் 19 இல்
    புதூர் 18 பேர்
13. 1991 செப்டம்பர் 19 இல்
    பள்ளித்திடல் 13, பேர்
14. 1992 ஏப்ரல் 29 இல்
    அழிச்சிப்பொத்தானை 170 பேர்
15. 1992 யூலை 21 இல்
    பறங்கிமடு 07 பேர்
16. 1997 அக்டோபர் 15 இல்
    பட்டித்திடல் 172 பேர்.
17. 1997 யூலை 20 இல்
    இலுப்பைக்குளம் 06 பேர்.
18. 2006 செப்டம்பர் 05 இல்
    மூதூர் 28,பேர்.
19. 2006 செப்டம்பர் 12 இல்
    பொத்துவில் 04 பேர்.

மொத்தமாக 770 முஸ்லிம் மக்கள் இதனால் மரணித்துள்ளனர். (இந்த தரவு அந்தந்த காலப்பகுதியில் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளில் திரட்டப்பட்டது)

## ஓட்டமாவடி நினைவுத்தூபி திறப்பு

ஆனால் கடந்த 2023 யூன் 23 ஆம் திகதி



வெள்ளிக்கிழமை ஓட்டமாவடியில் முஸ்லிம்கள் வாழும் கிராமத்தில் கல்குடா தியாகிகள் நினைவுத்தூபி குழுவினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு அல் கிம்மா சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் மௌலவி எம்.எம். ஹாரூன் ஸஹ்வி தலைமையில் இடம் பெற்றது.

இதில் வேடிக்கை என்னவெனில் லட்சக்கணக்காக தமிழினப்படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு மே 18 முள்ளிவாய்கால் நினைவு, கார்த்திகை 27, மாவீரர்நாள் நினைவு, முஸ்லிம் ஊர்காவல் படையினரை பயன்படுத்தி தமிழர்களை படுகொலைசெய்த அம்பாறை மாவட்ட திராய்மடு படுகொலை நினைவு, வீரமுனை படுகொலை நினைவு, உடும்பன்குளம் படுகொலை நினைவு, சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை, புதுக்குடியிருப்பு, காரைதீவு தொடக்கம் வாழைச்சேனை வரை 1990, ல் இடம்பெற்ற படுகொலை நாட்களை நினைவு கூர முடியாமல் கடந்த காலங்களில் தடுத்த அரசாங்கம் இன்று ஓட்டமாவடியில் யாரை நினைவு கூர இந்த நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணி என்ன என்பதெல்லாம் எவருக்கும் தெரியாமல் இல்லை. ஓட்டமாவடி நினைவுத்தூபி திறப்பு நிகழ்வின்போது கூறப்பட்ட கருத்து மூன்று தசாப்தங்களாக இடம் பெற்ற யுத்தத்தின்போது தாய்மண்ணையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக கல்குடா முஸ்லிம் பகுதியில் உயிர்நீத்த வீரர்கள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்கள், கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பிரதேச கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் நினைவுகூரப்பட்டதாக காட்டப்பட்டது.

உண்மையில் மூன்று சகாப்தமாக உயிர்நீத்த லட்சக்கணக்கான தமிழர்களை பற்றி அங்கு நினைவு கூரப்படவில்லை. இதுவும் தமிழ் முஸ்லிம் மக்களை பிரித்தாளும் நிகழ்ச்சி நிரலாகவும் தொடர்ந்து தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் ஒரு வேலைத் திட்டமே இது என்பதை புரிவது நல்லது.

**பா.அரியநேத்திரன்**

# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா 2023









**வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழாவில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு அம்பாளை வணங்கி ஆசி பெற்றுக்கொண்டனர். வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. அதிகாலை 04 மணியளவில் ஆரம்பமான பூஜைகளை தொடர்ந்து காலை 07 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று , உள்வீதியுலா வந்த அம்பாள் காலை 08.30 மணியளவில் தேரில் ஆரொகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். தேர் திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் , புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு , அம்பாளை வணங்கி அருளாசிகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.**

# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு: சூழலுக்கு பெரும் பாதிப்பு!!






கிளிநொச்சி - கல்லாற்றுப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு மேற்கொள்ளவதனால் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பறவைகள் சரணாலயமானது பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டாவளை பறவைகள் சரணாலய பகுதிகளிலிருந்து, ஆனையிறவு, குங்சுப்பரந்தன், கல்லாறு, சுண்டிக்குளம் பகுதிகளுடாக நாளாந்தம் 80 முதல்100 கியூப் மணல் வரை சட்ட விரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வுகள் சட்டத்தை தடுக்க வேண்டியவர்களின் துணையுடனே இவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றன. இது எதிர்காலத்தில் பாரிய ஒரு விளைவை ஏற்படுத்தும் என்பதே உண்மையாகும்.

மேலும், குறித்த கரையோரப் பகுதிகளிலே அயன மண்டல உலர்கலப்பு பசுமையான காடுகள் மற்றும் அயன மண்டல முட்புதர் காடுகள் என இருவகையான காடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறான காடுகள் கரையோரங்களையும் அண்டிய பகுதிகளில் வண்ணத்துப்பூச்சிகள், தும்பிகள், பறவையினங்கள் அதிக அளவில் வாழ்கின்றன.

மேற்படி தன்மையுடைய காடுகள் அழிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வுகளால் கரையோர காடுகள் அழிக்கப்படுவதுடன் அரிய வகை உயிரினங்களும் அழிவடைந்து வருகின்றது.

இவ்வாறு காடுகளை அழிப்பதாலும் மண் அகழ்வுகளினாலும் இதுவரை கண்டறியப்பட்டுள்ள 120 வகையான தும்பி இனங்கள், 24 வகையான வண்ணத்துப்பூச்சி இனங்கள், 499 வகையான பறவையினங்கள் அழிவடைந்து சூழலுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

இவற்றுக்கு மேலாக கடல் மட்டத்திலிருந்து அதிக ஆழத்துக்கு மணல் அகழ்வு மேற்கொள்வதனால் கடல் நீர் உட்புகுந்து நண்ணீர் உவர் நீராக மாறுகின்றது.

எனவே இவ்வாறான கடற் பாதிப்புக்களும், கரையோரப் பாதிப்புக்களும் சுற்றுச் சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புக்களையும் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது என்பது அவசியமாகும்.

தேசியம்
www.thesiyamnews.com THESIYAM තේසියම්

## நரேந்திர மோடிக்கு கடிதம்...

இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு கடிதமொன்றை இவ்வார இறுதிக்குள் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இக்கடிதத்தினை ஏனைய தரப்புக்களான இலங்கை தமிழரசு கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி உள்ளிட்ட தரப்புக்களுடனும் கூட்டிணைந்து அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த கடித விடயம் சம்பந்தமாக தெரிவிக்கப்படுவதாவது :

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முதல் தடவையாக இம்மாதம் 21ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, தமிழர்களின் தேசிய பிரச்சினை மற்றும் அன்றாட பிரச்சினைகள் மையப்படுத்தப்பட்டு, அவற்றை தீர்ப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற விடயம் குறிப்பிடப்படவுள்ளது.

அத்துடன், அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதும் அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளதோடு, மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஐந்து வருடங்களுக்கும் மேலாக காலம் தாழ்த்தியுள்ளது என்ற விடயமும் குறிப்பிடப்படவுள்ளது.

இதேவேளை, பௌத்த மதத்தின் பெயராலும் தொல்பொருளின் பெயராலும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொது மக்களுக்கு சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய வரலாற்றுப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமையும் சுட்டிக் காட்டப்படவுள்ளது.

தற்போது குறித்த கடிதத்துக்கான வரைவு, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாரத்துக்குள் அது இறுதி செய்யப்படவுள்ளது.

இந்தக் கடிதத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஜனநாயக போராளிகள், தமிழ் தேசிய கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையொப்பங்களை இடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறுதிப்போரின் உண்மைகளை...

"நேற்று யாழில் மைத்திரிபால சிறிசேன ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில், விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்தாரோ அல்லது உயிருடன் உள்ளாரோ என எனக்கு தெரியாது.

இதன் போது நான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். இருப்பினும் குறித்த விடயம் தொடர்பாக மேல்மட்டங்களுக்கே அறிவிக்கப்பட்டது என கூறியிருந்தார். இதுகுறித்து தங்களது கருத்து எவ்வாறு அமைகிறது" என செல்வராஜா கஜேந்திரனை ஊடகவியலாளர் ஒருவர் வினவியிருந்தார்.

இதற்கு பதிலளித்த செல்வராஜா கஜேந்திரன், மைத்திரிபால சிறிசேன பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும், மகிந்த ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சராக இருந்த போதும் அவர்களுடைய படைகள் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்திருக்கின்றார்கள்.

சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட இரசாயனக் குண்டுகள் மற்றும் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தி அந்தப் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன.

இவை அனைத்திற்கும் சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே நாங்கள் விடைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு ஒரு விசாரணை நடைபெற்றால்தான் இறுதிப்போரில் இடம்பெற்ற முழு சம்பவங்களையும் வெளி கொண்டுவர முடியும் என செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்திருந்தார்.

## கூட்டாட்சிக் கொள்கையின்...

ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

பிரித்தானியாவுக்கு விஜயம் செய்துள்ள பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் அண்ணாமலையிடத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணத்தில், இலங்கை அரசாங்கம் சர்வதேச நியமங்களை அலட்சியப்படுத்துவதையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு இணங்காத தன்மையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருவதால் இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சிய அரசாங்கங்கள் அமெரிக்காவுடன் இணைந்து நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகள், பேச்சுவார்த்தை மூலம் நீண்ட கால அரசியல் தீர்வு உட்பட பல சட்ட ரீதியான தீர்வுகளை மேற்கொள்ள முன்முயற்சிகளை எடுக்க வேண்டிய நேரம் இதுவாகும்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் இலங்கை தொடர்பில் எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியின் மையமாக இருக்க வேண்டும்.

14 ஆண்டுகளுக்குப் பிறகும் தாய்மார்கள், மனைவிகள் மற்றும் குழந்தைகள் தங்கள் காணாமல் போன உறவினரின் கதி என்னவென்று தெரியாமல் தங்கள் மகன், மகள், கணவன், தந்தை அல்லது தாயை தேடுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய நீதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், நீதி வழங்குவதற்கும், மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் ஒரு சர்வதேச சுயாதீன குற்றவியல் நீதி பொறிமுறையை அமைக்க வேண்டும்.

இடைக்கால நடவடிக்கையாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் 1948ஆம் ஆண்டு முதல் சிறிலங்கா அரசாங்கத்தால் ஒருபோதும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. தற்போது உள்நாட்டுப் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், உள்கட்டமைப்பை புனரமைக்கவும் போதுமான சட்ட, நீதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடைக்கால ஆணையம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்த விடயத்தில், 1987ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இலங்கையில் இனப்பிரச்சினைக்கான பரிகாரமாக இந்திய ஒன்றியத்தில் காணப்படுவதை போன்றதொரு பிராந்திய சுயாட்சி அல்லது அரை கூட்டாட்சி மாதிரியை முன்வைத்தது. அந்த மாதிரியின் உள்நோக்கமும் நோக்கமும் இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த மாகாண சபை சட்டமூலங்களில் மிகவும் நீர்த்துப்போனது.

சட்டமூலத்தில் உள்ள அற்ப அதிகாரங்கள் கூட மாகாண சபைகளுக்கு முழுமையாக பகிர்ந்தளிக்கப்படவில்லை. நிறைவேற்று அதிகாரங்கள் தெரிவு செய்யப்பட்ட சபைக்கு வழங்கப்படாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநருக்கு வழங்கப்படுகின்றன. கவுன்சிலுக்கு நிதி அதிகாரங்கள் எதுவும் இல்லை மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை பெறுவதற்கான வாய்ப்பும் இல்லை. தற்போதைய காலகட்டத்தில் மேற்படி மாதிரியானது தேவைக்கு பொருந்தாது என்பதால் இது சரியான முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

நீண்ட கால அரசியல் தீர்வாக இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்படும் கூட்டாட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு நீண்ட கால அரசியல் தீர்வு, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்க அரசாங்கங்களின் நடுவர் மன்றத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், பொருளாதார ஒருங்கிணைப்புக்காக தமிழ்நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்பு, வடக்கு, கிழக்கு தமிழர்கள் மற்றும் மலையகத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பு துரித கதியில் நடைபெற வேண்டும். யாழ்ப்பாண விமான நிலையத்தை உண்மையான சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் தற்போதைய இணைப்புத் திட்டங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, மத்திய கிழக்கு, தூர கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் விமான சேவைகளுடன் இணைக்கப்பட வேண்டும்.

மேலும், சென்னை, காரைக்கால் மற்றும் காங்கேசன்துறை இடையே கப்பல் சேவையை மேம்படுத்துவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் வகையில் தலைமன்னாருக்கும் தனுஸ்கோடிக்கும் இடையில் தரைவழிப் பாலம் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## விடுதலை புலிகளின் தலைவரி...

இருந்தேன் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடக சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணு பரிசோதனை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது. நான் இறுதி யுத்த காலத்தில் இரண்டு வாரங்களுக்கு பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன்.

எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது. எனக்கு அதை பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை. பிரபாகரன் கொல்லப்பட்டாரா என்பது எனக்கு தெரியாது. அது மேல்மட்டத்தை சேர்ந்தவர்களுக்கே தெரியும். அவர்களே அதை கட்டுப்படுத்தினர் – என்றார்.

கடந்த காலங்களில் கருத்து தெரிவித்த மைத்திரிபால சிறிசேன இறுதி யுத்தத்தின் வெற்றியில் தனக்கும் கணிசமான பங்கு இருப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஊடக சந்திப்பில் யாழ்,கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டி வாஸ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொருளாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலனறுவை மேற்கு அமைப்பாளர் தஹாம் சிறிசேன உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## தமிழர் விவகாரத்தில் இந்தியா...

வெகுவிரைவில் ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், தமிழர் விவகாரத்தில் இந்தியா செயற்படவேண்டிய விதம் குறித்து தெளிவுபடுத்தி இந்தியாவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைக்க இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 20ஆம் திகதி இந்தியா செல்லவிருப்பதாகவும், 21ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள பின்னணியிலேயே, முக்கிய தமிழ் தேசிய கட்சிகளில் ஒன்றான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் வேண்டாம் எனவும், அதனை இந்தியா வலியுறுத்தக்கூடாது எனவும் தொடர்ச்சியாக கூறிவரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் மாத்திரமே தீர்வு காண முடியும் என்றும், அதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஏற்கனவே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது இதுகுறித்து அவரிடம் எடுத்துக்கூறியதாகவும், "இந்திய – இலங்கை ஒப்பந்தம் வேறு, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் வேறு" என்ற விடயத்தை விசேடமாக சுட்டிக் காட்டியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்திய - இலங்கை ஒப்பந்தம்தான் இந்தியாவின் நேரடித் தலையீட்டின் மூலம் உருவாக்கப்பட்டது என்றும், 13ஆவது திருத்தம் என்பது அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகிறோம் என்ற பேரில் இலங்கை அரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக தயாரிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், 13ஆவது திருத்தம் தமிழர்களை பாதிப்பதனாலேயே அதனை நிராகரிப்பதாகவும், மாறாக, இந்தியாவை தாம் ஒருபோதும் பகைக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் வெகுவிரைவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அதற்கு முன்பாக 13ஆவது திருத்தம் குறித்த தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியும், தமிழர் விவகாரத்தில் இந்தியா செயற்படவேண்டிய விதம் பற்றிய தமது அபிப்பிராயம் குறித்து விளக்கமளித்தும் கடிதமொன்றை அனுப்பிவைக்க இருப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




CREATIVE DESIGNER
every design has a story
Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers
+94 77 3828 594
kkcreativedesigner@gmail.com
kkcreativedesigner

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339

# புத்த பகவானுடைய அருமையான கோட்பாடுகள் மீறப்படுகிறது – சுகாஷ் ஆதங்கம்!



எமது உணர்வுகளுக்கு மேலும் சுமையும் துன்பங்களும் ஏற்படுத்துகின்ற வகையில் இந்த சிங்கள பௌத்த பேரினவாதம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரைக்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டவேளை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கவில்லையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய தொடர் போராட்டத்திற்கு சாதகமான பதில் இற்றைவரை பொறுப்பு வாய்ந்த எவரிடம் இருந்தும் எமக்கு கிடைக்கவில்லை. எனவே நமக்கு வேறு மாற்றங்களோ வேறு உபாயங்களோ கிடையாது.

எமது மக்களுடைய எதிர்கால இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், சட்டவிரோத சிங்கள ஆக்கிரமிப்புகளை தடுப்பதற்காகவும் மீண்டும் தையட்டியிலே எங்களது போராட்டத்தை தொடர வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்ற விடயம், சிங்கள மக்களையோ பௌத்த மதத்தையோ நாங்கள் வெறுக்கவில்லை. பௌத்தத்தை நாங்கள் நேசிக்கின்றோம் சிங்கள மக்களை நாங்கள் விரும்புகின்றோம். அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்கின்றோம். நாங்கள் தாழ்மையாக கேட்பது, நாங்கள் எவ்வாறு உங்களை மதிக்கின்றோமோ, உங்களது உணர்வுகளை புண்படுத்தாது செயற்படுகின்றோமோ அதேபோல் நீங்களும் நடந்து கொள்ளுங்கள்.

சிங்கள மக்களே நீங்கள், சட்டவிரோத கட்டடங்களை அகற்றுமாறு அரசுக்கு அழுத்தத்தை கொடுங்கள். ஏனென்றால் தமிழ் மக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் சிங்கள சகோதரர்களுடைய, பௌத்த மதத்தவர்களுடைய வாழிடத்தை அழித்து அங்கே நாங்கள் எங்களது அடையாளங்களை பதிக்கவில்லை. பதிக்கப் போவதும் இல்லை. ஏனென்றால் நாங்கள் சிங்கள மக்களையும் விரும்புகின்றோம், பௌத்த மத போதனைகளையும் விரும்புகின்றோம்.

ஆனால், இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது புத்த பகவானுடைய அருமையான பௌத்த கோட்பாடுகளும் மீறப்பட்டு, அகிம்சைக்கு முரணாக இராணுவமும், சிங்கள பௌத்த பேரினவாதமும் தமிழ் மக்களுடைய காணிகளை ஆக்கிரமித்து ஒரு சட்ட விரோதமான கட்டடத்தை இங்கே கட்டி இருக்கின்றார்கள். அதற்கு எதிராகத்தான் நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம். இந்த சட்டவிரோத கட்டடம் அகற்றப்படும் வரை எங்களது போராட்டம் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண நகர் பகுதி வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை! – பொலிஸார் விடுத்துள்ள எச்சரிக்கை



யாழ்ப்பாணம் நகர் பகுதியில் வீதியோர பழக்கடை வியாபாரிகள் சிலர் பெண்களுடன் முறைதவறிப் பேசுகின்றனர் என்ற பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவை தொடருமானால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பழம் வாங்கச் சென்ற பெண்ணுடன் முறை தவறி உரையாடினார் என்று தெரிவித்து பழக்கடை வியாபாரி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டிருந்தார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகர் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடுவர்கள் நுகர்வோருடன் நாகரீகமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு செயற்பட்டால் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் வீதியோர வியாபாரத்தில் ஈடுபடும் சிலரது நடவடிக்கையால் அனைவருக்கும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்படும் நிலையில், எதிர்காலத்தில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டு அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

# யாழில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வெள்ளி, ஞாயிறு விடுமுறை! கண்காணிப்பு நடவடிக்கையும் தீவிரம்



"யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதிலும் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தரம் 9 வரையான மாணவர்களுக்கு நேற்று விடுமுறை வழங்கவேண்டும். இந்தத் திட்டம் மாவட்டத்தில் நேற்றிலிருந்து நடைமுறையாகின்றது."- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ். மாவட்ட செயலகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் கல்வி நிறுவனங்களை விடுமுறைநாளாக கடைப்பிடிக்க வேண்டும்.

இது குறித்து கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் முகமாக யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் பிரதேச செயலர்கள் ஊடாக 200 தனியார் கல்வி நிறுவனங்களும், 200 குழு வகுப்புக்களை நடத்துகின்ற இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பிரதேச செயலர்கள் மூலம் கண்காணிப்புக்கள் இடம்பெறவுள்ளன.

மாணவர்களின் எதிர்கால மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுள்ள இந்த விசேட நடைமுறையை மனிதாபிமான அடிப்படையில் அனைத்து கல்வி நிறுவன, குழு வகுப்புக்களை நடத்தும் உரிமையாளர்களும் கவனத்தில்கொண்டு நேற்று முதல் செயற்படுத்த வேண்டும்." - என்றார்.

# கின்னஸ் சாதனையை முறியடித்த புனித மைக்கேல் கல்லூரி சாரண மாணவர்கள்!!



புனித மைக்கேல் தேசிய பாடசாலையின் சாரண மாணவர்களினால் புதிய கின்னஸ் சாதனை நேற்று (02) நிகழ்த்தப்பட்டுள்ளது.

புனித மைக்கேல் தேசிய பாடசாலையின் 150 வது வருட நிறைவினை முன்னிட்டு "பிளாஸ்டிக்கை கடந்து செல்வோம்" (Pass on plastic ) எனும் தொனிப்பொருளில் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று பாடசாலை அதிபர் ஆர். யே.பிரபாகரன் தலைமையில் புனித மைக்கேல் சாரண படையின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

29.57 செக்கனில் ஐம்பது சாரண மாணவர்களினால் 2124 பிளாஸ்ரிக் வெற்று பொத்தல்களினால் 150 இலக்கத்தை அமைத்து கின்னஸ் சாதனையை முறியடித்துள்ளனர்.

இந் நிகழ்வின் கின்னஸ் சாதனைக்கான பரிந்துரை நடுவர்களாக மண்முனை வடக்கு பிரதேச செயலக கணக்காளர் எஸ்.புவனேந்திரன் மற்றும் வாகரை பிரதேச செயலக கணக்காளர் திருமதி.சந்திரகலா ஜேயேந்திரா ஆகியோர் நியமிக்கப்பட்டு தமது கடமையினை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் சோழன் புத்தக உலக சாதனை நிறுவனத்தினால் (Cholan book of world record) சான்றிதழ்கள் இதன் போது மைக்கேல் கல்லூரியின் சாரண மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வின் போது 2022/2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி விருது பெற்ற பாடசாலை சாரண மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பாக்கு நீரினை நிந்தி கடந்த தவேந்திரன் மதுசிகனுக்கு வெற்றி கேடயம் வழங்கி கௌரவமளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு யேசு சபை துறவி அருட்தந்தை போல் சற்குணநாயகமும், நிகழ்விற்கு அதிதிகளாக 231 வது இராணுவ படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் திலுப்ப பண்டார, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், னுஜபு உதித் லியனகே, மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் எந்திரி சிவலிங்கம், வலய கல்வி பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் ஆகியோரும் மாவட்ட சாரணர் ஆணையாளர் விவேகானந்தன், சாரண குழு ஆசிரியர் பத்மநாதன், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஏனைய பாடசாலைகளின் சாரண மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

HE & SHE
FASHIONS
Ultimate Destination for
FASHIONS

NO. 323, 309, KASTHURIYAR ROAD, JAFFNA.

# யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளரின் கடிதத்தினால் சர்ச்சை!



யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் தனிப்பட்ட காரணங்களுக்காக மேலதிக நீதிவானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி சங்கத்தின் சார்பில் எழுதிய கடிதத்தினால் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றினை காரணம் காட்டிய அந்தக் கடிதம் அமைச்சர்கள் விஜயதாஸ ராஜப்ச, டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டமை விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.
இந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினுடையது அல்ல என்று அதன் தலைவர் விளக்கக் கடிதம் ஒன்றை நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராக ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் உள்ளார்.
மோசடியாகத் தயாரிக்கப்பட்ட அற்றோனித் தத்துவம் பத்திரம் ஒன்று தொடர்பில் சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின் அண்மையில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் விசாரணைக்கு உள்படுத்தபடுத்தபட்டார். அந்தப் பத்திரம் தனது எழுதுனரினால் தயாரிக்கப்பட்டது என்றும் தன்னிடம் ஏமாற்றி கையொப்பம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியிருந்தார்.
சட்டத்தரணி எஸ்.செலஸ்ரினின் வாக்குமூலத்துக்கு அமைய அவரது எழுதுனர் கைது செய்யப்பட்டு ஜூன் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.
ஜூன் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தை கூட்டிய செயலாளர், சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வழங்க வேண்டும் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.
எனினும் நிலுவையில் உள்ள வழக்குத் தொடர்பில் அவ்வாறு முறைப்பாடுகளை முன்வைக்க முடியாது, அது சட்டத்தரணிகள் சங்கத்தின் தார்மீகமும் கிடையாது என்று சட்டத்தரணிகள் உறுதியாகத் தெரிவித்தனர்.
எனினும் மறுநாள் ஜூன் 27ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தலைப்பில் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் அனுப்பப்படும் கடிதம் எனக் கூறி நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.
அதன் பிரதிகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளார்.
யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் அந்த மன்றில் முன்னிலையாவதை புறக்கணிப்பார்கள் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் கடிதத் தலைப்பில் செயலாளர் மட்டும் ஒப்பமிட்டு அனுப்பிய இந்தக் கடிதம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரிடம் கேட்டிருந்தது.
அத்துடன், நீதி சேவையுடன் தொடர்புடைய அலுவலர் ஒருவர் மீதான முறைப்பாட்டை முறையற்ற வகையில் அரசியல் தலைவர்களுக்கு அனுப்பியது தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டது.
இந்த நிலையில் இந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினுடையது அல்லது என்று அதன் தலைவர், மூத்த சட்டத்தரணி எஸ்.தவபாலன் விளக்கக் கடிதம் ஒன்றை நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் மாண்பை மீறி செயலாளர் தனிப்பட்ட காரணத்துக்காக பதவியை பயன்படுத்தியமை தொடர்பில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் – இரத்மலானை

## உள்ளூர் விமான சேவை ஆரம்பம்..! கட்டணம் எவ்வளவு தெரியுமா..!





இரத்மலானையிலிருந்து – யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான உள்நாட்டு விமான சேவை 01ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. என இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இருந்து ஒரு மணி நேரம் பத்து நிமிடத்தில் யாழ்ப்பாணத்தை அடைய முடியும் எனவும் இந்த விமான சேவை வாரத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நான்கு நாட்களுக்கு காலை வேளைகளில் விமானங்கள் இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.
12 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய செஸ்னா 208 இந்தப் பயணத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஃபிட்ஸ் ஏவியேஷன் / டேவிட் பீரிஸ் ஏவியேஷன் ஆகிய நிறுவனங்கள் இந்த பயணிகள் போக்குவரத்திற்காக விமானங்களைப் பயன்படுத்தியுள்ளன.
ஒரு வழிக்கட்டணமாக ரூ.22 ஆயிரம் ரூபாவும் இருவழிக்கட்டணமாக ரூ.41500 அறவிடப்படும். இதில் பயணிக்கும் பயணி ஒருவர் 7 கிலோகிராம் பொதியை கொண்டு செல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.
இதன்மூலம் யாழ்ப்பாணம் சென்று வருவதற்கும் வசதியாக இருக்கும் எனவும் இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்தார்.

# கருணாகரன் எம்.பியின் வேண்டுகோளுக்கு அமைய குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலய காணியை விடுவிப்பதற்கு இராணுவம் இணக்கம்!!!





கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் மைதானத்தில் குருக்கள்மடம் இராணுவ முகாம் அமைத்திருக்கின்றமை தொடர்பில் தெரியப்படுத்தி இராணுவ முகாமை விடுவித்து அக்கட்டிடங்கள் மற்றும் மைதானத்தை மீண்டும் பாடசாலைக்கு ஒப்படைப்பது சம்மந்தமாகப் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா அவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கலந்துரையடப்பட்டதற்கிணங்க குறித்த இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கரணாகரம் உள்ளிட்ட அதிகாரிகள் குழு சென்று சம்மந்தப்பட்ட இராணவத்தினருடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்து அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆளுநர் அவர்களினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக குருகக்கள்மடம் இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்திற்கு நேற்றைய தினம் களவிஜயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இவ்விஜயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஜனா உட்பட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேச செயலாளர், வலயக் கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர்.
குறித்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லையாயினும் இரண்டாம் நிலை அதிகாரி அங்கிருந்தார். அவருடன் கலந்துரையாடியதற்கமைவாக ஒரு அறிக்கை தயாரிப்பதென முடிவெடுக்கப்பட்டது.
இராணுவம் தற்போது அந்தப் பாடசாலை கட்டிடங்கள் அடங்கிய 2.9 ஏக்கர் நிலப்பரப்பைப் பாவிப்பதற்கு மேலதிகமாக அரச காணி 5 ஏக்கரையும் பாவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே பாடசாலைக்குரிய கட்டிடம் இருக்கும் காணியையும், மைதானத்தையும் விடுத்து ஏனைய 5 ஏக்கரையும் பாவிப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கபப்படாததை யடுத்து அவர்கள் பாடசாலைக்குரிய காணி, மற்றும் கட்டிடங்களை விடுவிக்கும் படியாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு காணி விடுவிப்புக்குரிய தீர்மானம் நிறைவேற்றப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை முகநூல் பயனாளர்களுக்கு எச்சரிக்கை..!

## சூட்சுமமாக இடம்பெறும் நிதி மோசடிகள்!




நுவரெலியா, கண்டி, கேகாலை மாவட்டங்களின் பல பகுதிகளில் சட்ட விரோத பிரமிட் முறையிலான நிதி வர்த்தகங்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
குறிப்பாக, அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களால் மிகவும் சூட்சுமமாக முகநூல் வழியாக இந்த மோசடி வர்த்தக செயற்பாடுகள் இடம்பெறுவதாக பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு செய்து வருகின்றனர்.
சுமார் ஒரு இலட்சம் ரூபாய் வரை பணத்தை பெறும் குறித்த ஒரு வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்தில், பயனாளர்களுக்கு பணத்துக்குப் பதிலாக சுமார் ஐயாயிரம் பெறுமதியான தேநீர் கோப்பை தொகுதிகள் அல்லது உணவுத் தட்டுகளை வழங்குவதாகவும், பின்னர் 20 பேரை இணைத்துக்கொண்டு அதன் மூலம் பணத்தைப் பெற்றுக்கொடுத்தால் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாய் வங்கிக்கு வைப்பீடு செய்யப்படும் என்றும் கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது.
மேலும், இந்த வலையமைப்பினரோடு இணைந்துகொள்பவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது, கவர்ச்சியான ஆடம்பரமான ஆண்/பெண்களை வரவழைத்து பணம் சம்பாதிக்கும் வழிவகைகளை கூறுவது என பலவாறு வலையமைப்பினர் செயற்படுவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.
மேலும், இந்த வலையமைப்போடு தொடர்புகொள்பவர்கள், தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களை இதில் இணைத்துக்கொள்வதற்காக அவர்களது வீடுகளுக்கும் சென்று வலையமைப்பினர் தொல்லை கொடுப்பதாகவும், அவர்கள் பல வாகனங்களின் முன்பாக நின்று எடுக்கப்பட்ட படங்களை தமது முகநூல் பக்கத்தில் காட்டி பலரை மூளைச்சலவை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதில் பிராந்திய கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்கள், பிரபல கல்லூரிகள், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பிரதானமாக செயற்படுவதாகவும் கூறப்படுகிறது.
இவர்கள் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதால் பலரும் நம்பி பணத்தை கொடுத்து ஏமாற்றமடைந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக பலர் மீது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala
காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்
Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069




சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016
யாழ்ப்பாணம்
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004




காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
மகாநதி ஜ்வல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025




STUDIO
Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL
PHOTOGRAPHY
PHOTOGRAPHY STUDIO
BOOK NOW
+94 777 47 4498
EVENT | VIDEO | FASHION | WEDDING |
CORPORATE | MATERNITY | COMMERCIAL |
STUDIOS | FRAMES | ALBUM DESIGNING |
ALBUM MAKING | VIDEO EDITING | MUG &
ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.






இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.